

புதுக்கோட்டை மாவட்டம்/ மாநகராட்சி, டவுன் பேங்க் சந்து (இரவு மார்க்கெட்) பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய பேவர் பிளாக் சாலையினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று முன்தினம் (15.12.2025) திறந்து வைத்தார். உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில் , புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா , துணை மேயர் எம்.லியாகத் அலி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.



சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாநகராட்சியில், புதிய நியாய விலைக் கடையினை திறந்து வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், சேலம் மாநகராட்சி ஆணையாளர் மா.இளங்கோவன், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ராஜ்குமார், அம்மாப்பேட்டை மண்டல குழுத்தலைவர் கே.டி.ஆர்.தனசேகர் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி, செந்துறை ஒன்றியம், ஆர்.எஸ்.மாத்தூர் ஊராட்சியில் இலவசத் தையல் பயிற்சி மையத்தைத் அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்துவைத்து, வாழ்த்தினார். சுயதொழில் மூலம் முன்னேறவும் வழிவகை செய்யும் நோக்கில், 'சிவசங்கர் சமூக நல அறக்கட்டளை' (Sivasankar Social Welfare Trust) சார்பில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. உடன் ஒன்றிய பொறுப்பாளர்கள் வி.எழில்மாறன், பொன்.செல்வம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## எம்.இராஜ்குமார் தலைமையில்

# பெரம்பலூரில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பொதுக்கூட்டம்!

## செ.அண்ணாதுரை - கே.கே.எம்.குமார் பங்கேற்பு!

பெரம்பலூர், டிச.17 - பெரம்பலூர் ஒன்றியம், கோணேரிப்பாளையம் கிராமத்தில்,ஒன்றிய கழகச் செயலாளர் எம்.இராஜ்குமார் தலைமையில் "என் வாக்குச்சாவடி" வெற்றி வாக்குச்சாவடி" பொதுக் கூட்டம் நடைபெற்றது. பாக எண் 211,212 ஆகிய வாக்குச்சாவடிகளில் நடைபெற்ற கூட்டத்தில்,

தி.மு.க. ஆட்சியில் கருவறை முதல் கல்லறை வரை திட்டங்கள் கொண்டு வரப்பட்டது குறித்தும், தற்போதைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் எண்ணற்ற பல்வேறு திட்டங்கள் பொதுமக்கள் பயன்பெறும் நடைபெற்றுள்ளது என்றும் பொதுமக்களிடம் எடுத்துக்கூறினார்.

வருகிற சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.விற்கு வாக்களிப்போம் என்று பொதுமக்கள் கூறி னார்கள்.

இதில் பொதுக்குழு உறுப்பினர் செ.அண்ணாதுரை தொ.மு.ச.பேரவை கவுண்சில் மாவட்ட தலைவர் கே.கே.எம்.குமார், ஒன்றிய கழக பொருளாளர் கலையரசன், ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் எஸ்.ஆர்.டி.ராமலிங்கம், வழக்கறிஞர் அழகேசன், கண்ணகி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திருவெறும்பூர் வடக்கு ஒன்றியத்தில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி – பசும்பொன் ரவிச்சந்திரன் சிறப்புரை!



திருவெறும்பூர், டிச. 17 - கணவனே கைவிட்டாலும் கல்வி கைவிடாது என கூறிய கலைஞரின்மகன் புதுமைப்பெண் திட்ட மூலம் ஆயிரம் ரூபாய் வழங்கி வருகிறார்.

திருவெறும்பூர் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கூத்தைப்பார் பேரூராட்சியில் உள்ள ஜெய் நகர் பகுதியில் தமிழக துணை முதல்வரின்பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடந்தது.

கூட்டத்திற்கு கூத்தைப் பார் பேரூர் கழகச் செயலாளர் தங்கவேல் தலைமை வகித்தார்,

மேலும் கூட்டத்துக்கு வருகை புரிந்த அனைவரையும் கூத்தைபார் பேரூராட்சி தலைவர் செல்வராஜ் வரவேற்றார் .

மேலும் இந்த பொதுக் கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார் தமிழக பள்ளி கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைக் கழக பேச்சாளர் பசும்பொன் ரவிச்சந்திரன்,

இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சேகரன் , மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்த பொதுக் கூட்டத்தில் தமிழக பள்ளி கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:- ஒரு மாநாடு என்றால் ஒரு கூட்டம் என்றால் எவ்வாறு நடத்திட வேண்டும் என்று மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக திருவண்ணா மலையில் ஒரு மாபெரும் வெற்றி மாநாட்டை நடத்திக் காட்டியவர் தான் நமது தமிழக துணை முதல்வர் என்றும் இன்றைய இளைய சமுதாயத்தை மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக எவ்வாறு ஒழுக்கமாக நடத்திட வேண்டும் என அந்த கூட்டத்தில் உரையாற்றிய போது அவர் ஒரு கோடி மக்கள் கட்டுப்பாடு இல்லாமல் இருந்தாலும் அது தேவையில்லை என்றும் ஒழுக்கமான ஒரு லட்சம் இளைஞர்கள் கட்டுப் பாட்டோடு இருந்தால் அதுவே போதும் என்ன உரையாற்றியவரின் பிறந்த நாளை தான் இன்று நாம் கொண்டாடி வருகிறோம் என்றும் மேலும் திருச்சி மாவட்டம் எனது சொந்த ஊராக இருந்தாலும் திருவெறும்பூர் என்பது எனது சொந்த வீடு என்றும் மேலும் இதே கூத்தைப்பார் பேரூராட்சியில் இதுவரை 2021 முதல் 25 வரை சாலை வசதி குடிநீர் வசதி மழை நீர் வடிகால் வசதி, அரசு ஆரம்ப சுகாதார நிலையம் பயணியர் நிழற்குடை படித்துறை அமைத்தல் என இதுவரை இந்த கூத்தாடி பார் பேரூராட்சிக்கு 23 கோடியை 64 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்து பயன்பாட்டிற்கு நாம் கொண்டு வந்துள்ளதாகவும்,

மேலும் நமது தமிழக முதல்வர் அவர்கள் எங்களிடம் அடிக்கடி கூறுவது மக்கள் நம்மை நம்பி வாக்களித்துள்ளனர் என்றும் எனவே அவர்கள் நம்பிக் கையை காக்கும் வகையில் அவர்களின் தேவையை அனைத்தையும் நாம் பூர்த்தி செய்வதே நமது தலையாய கடமையாக கருத வேண்டும் என கூறி வருவதாகவும். நம் நெஞ்சமெல்லாம் வாழும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பெண் பிள்ளைகளை எட்டாம் வகுப்பு 12ஆம் வகுப்பு வரை படிக்க வையுங்கள் நான் கல்வித் தொகை தருகிறேன்.

கணவனே கைவிட்டாலும் கல்வி அவர்களை கைவிடாது என அவர் எடுத்துரைத்ததாகவும் ஆனால் அவரது மகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் பெண் பிள்ளைகளை பள்ளியில் இருந்து கல்லூரி படிப்பு இரண்டாண்டாக இருந்தாலும் மூன்று ஆண்டாக இருந்தாலும் ஐந்து ஆண்டுகளாக இருந்தாலும் நாங்கள் அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கி கல்வி வழங்குவோம் என எடுத்துரைத்தவர் தான் தமிழக முதல்வர் என்றும்,

மேலும் அவரது கரத்தை வலுப்படுத்தும் வகையில் இன்று அவருக்கு உறுதுணையாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழக துணை முதல்வரின் பிறந்த நாளில் நாம் அனைவரும் மீண்டும் திராவிடம் மாடல் நாயகரின் திராவிட மாடல் ஆட்சி மலர பாடுபடுவோம் என சூளுரைப் போம் என கூறினார் .


## D.T.P. ஆப்பரேட்டர்கள் -- போட்டோஷாப் மற்றும் பிழை திருத்துனர்கள் தேவை !

முரசொலி கணினிப் பிரிவில் பணிபுரிய 'போட்டோஷாப்' (LAYOUT) பணியில் நன்கு தேர்ச்சி பெற்ற **D.T.P.** ஆப்பரேட்டர்கள் மற்றும் முன் அனுபவம் மிக்க பிழை திருத்துநர்கள் (PROOF READERS) பகல் மற்றும் இரவுப் பணிகளுக்கு (ஆண்கள், பெண்கள்) தேவை. தகுந்த சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :–
பொது மேலாளர்
'முரசொலி' – நாளிதழ்
180, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை – 600 034.




கரூர் மாவட்ட கழகம் சார்பில் இளைஞர் எழுச்சி நாள் விழாவை கொண்டாடும் வகையில், விளையாட்டு திருவிழாவில் தொடர் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. இதில் பெண்களுக்கான கபடி போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு தொகை மற்றும் கோப்பைகளை கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ வழங்கினார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்டம், மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதி, காரமடை மேற்கு ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் க.தேவ் பிரசாத் ஏற்பாட்டில், காரமடை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சுரேந்திரன் தலைமையில், அந்தோணி ராஜ் வரவேற்புரையில் பரளிக்காடு மலைவாழ் கிராம பள்ளி மாணவ, மாணவிகளுக்கு புத்தக பை, நோட், நீர் அருந்தி, பென்சில் கிட் ஆகியவைகளை கழக மாணவரணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ் காந்தி வழங்கினர். இதில் கழக மாணவரணி துணை செயலாளர் விஜி கோகுல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம், கூடலூர் நகர கழக செயலாளர் அரிவரசு, மாணவரணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் ராஜ்திலக், முனிஷ் ஒன்றிய துணை அமைப்பாளர்கள் ராமராஜ், பிரபாகர், வேதவிகாஷ், ஆசிக், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு துணை அமைப்பாளர் அலெஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# நீலகிரியில் துணை முதல்வர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் !

உதகை, டிச. 17 - நீலகிரி மாவட்டம், குன்னூர் நகர திமுக சார்பில் நகர செயலாளர் எம். ராமசாமி தலைமையில் துணை முதல்வர் பிறந்த நாள்விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாநில விளையாட்டு மேம்பட்டு அணி துணை செயலாளர் வாசிம் ராஜா அனைவரையும் வரவேற்றார்.

நீலகிரி மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் கே.எம்.ராஜூ , கழக உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர் அரசு கொறடா கா. ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கழக செய்தி தொடர்பு இணை செயலாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா கலந்து கொண்டு திராவிட மாடல் அரசின் நான்கரை ஆண்டு கால சாதனைகளை விளக்கியும், துணை முதல்வர் அவர்களின் மக்கள் பணிகள் ஒவ்வொன்றையும் பட்டியலிட்டு சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில், மாவட்டக் கழக அவை தலைவர் போஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் Expo செந்தில், சுனிதா, மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், ஒன்றிய செயலாளர்கள் பிரேம்குமார், நெல்லை கண்ணன், பீமன், லாரன்ஸ், பேரூர் கழக செயலாளர்கள் ரமேஷ், சஞ்சீவ், காளிதாஸ், மார்டின், முத்து, பொதுக்குழு உறுப்பினர்கள் சதக்கத் துல்லா, செல்வம், காலிதாசன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வெங்கடேஷ், ஜெயக்குமார்,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பத்மநாபன், வினோத் குமார், குன்னூர் நகரமன்ற தலைவர் சுசீலா, தலைமை கழக பேச்சாளர்கள் ஜாகீர் உசேன், கலீம் உட்பட நகர கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட நகர துணை அமைப்பாளர்கள், நகரமன்ற உறுப்பினர்கள், கிளை கழக நிர்வாகிகள் செயலாவீரர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.

கூட்டம் முடிவில் குன்னூர் நகர இளைஞர் அணி அமைப்பாளர் செய்யது மன்சூர் நன்றி கூறினார்.



நாமக்கல் குற்றவியல் வழக்கறிஞர்கள் சங்க தேர்தலில் வெற்றி பெற்ற கழக வழக்கறிஞர்கள், சங்கத்தின் செயலாளர் வழக்கறிஞர் பெ.இராஜரத்தினம் பொருளாளர் வழக்கறிஞர் ஐயப்பன், இணைச் செயலாளர் வழக்கறிஞர் நந்தகுமார், துணைத் தலைவர் வழக்கறிஞர் அருண் பிரசாத் ஆகியோர் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமாரை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வில் மாவட்ட வழக்கறிஞர் அமைப்பாளர் ஆனந்தபாபு, அரசு வழக்கறிஞர் செல்வம், கூடுதல் அரசு வழக்கறிஞர்கள் வ.க.அறிவழகன், மோகன்ராஜ், மூத்த வழக்கறிஞர் கருணாநிதி, வழக்கறிஞர்கள் சிவகை சக்திவேல், அகிலன் மற்றும் மாவட்டத் வழக்கறிஞர்கள் அணி துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம் நரசிங்கபுரம் நகராட்சி புதிய அலுவலகம் ரூ.4 கோடி 5 லட்சம் மதிப்பில் கட்டும் பணியினை நகர மன்ற தலைவர் அலெக்சாண்டர் , நகர செயலாளர் வேல்முருகன், கிழக்கு ஒன்றிய செயலாளர் டாக்டர் செழியன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் கவுன்சிலர்கள் பிரகாஷ், சுப்பிரமணி, தர்மராஜ், அன்னக்கிளி ,மீராதேவி ,செல்வகுமார் , ஆணையாளர் பவித்ரா, கதிர்வேல், கண்ணன், மற்றும் ஒப்பந்ததாரர் , அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.